## தமிழ்நாடு அரசு

சுருக்கம்

பயிற்சி – தொலைபேசி இயக்குபவர் / தொலை அச்சு இயக்குபவர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக நியமனம் பெறுபவர்களுக்கு பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி அளிப்பது குறித்தும் கடைநிலைப் பணி மற்றும் பதிவறை எழுத்தர் ஆகியவர்கள் உதவியாளராக பதவி உயர்வு பெற்று 53 வயது கடந்தவர்களுக்கு அடிப்படைப் பயிற்சியிலிருந்து விலக்களித்தும் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பயிற்சி–1) துறை

அரசு ஆணை (நிலை) எண். 184 நாள் : 15.10.1999

படிக்க :

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரின் கடித எண். 131730/நி2/2/97, நாள் 25.3.98.

* * *

ஆணை :

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்கள், தொலைபேசி இயக்குபவர்/தொலை அச்சு இயக்குபவர் பணி மாற்றம் வாயிலாக இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு தற்போது பதவி உயர்வின் காரணமாக உதவியாளராக பணியமர்த்தம் செய்யப்பட்ட நபர்களுக்கு பவானிசாகரில் அடிப்படைப் பயிற்சி வழங்குவது பற்றியும், தட்டச்சர், கடைநிலைப்பணி மற்றும் பதிவறை எழுத்தர் போன்ற இனங்களிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்ற 53 வயதைக் கடந்தவர்களுக்கு பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தினால் அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சி அளிப்பதிலிருந்து விலக்களிப்பது குறித்தும் தெளிவுரை வேண்டி அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. மேற்கூறிய கருத்துருவினை அரசு பரிசீலித்து நன்கு ஆராய்ந்து கீழ்க்கண்ட ஆணைகள் வெளியிடப்படுகின்றன :

(அ) உதவியாளராக பதவி உயர்வு பெறுவதற்கான திருத்தப்பட்ட நடைமுறைகள் குறித்து 1.12.93ம் நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பணி–பி) துறை, அரசு ஆணை (நிலை) எண். 417ல் உள்ள ஆணையின்படி தட்டச்சர் பதவியிலிருந்து நிரந்தர உதவியாளராக பதவி உயர்வு பெற்றவர், அப்பதவி உயர்வு பெற்ற இரண்டாண்டு காலத்திற்குள் பவானிசாகரில் நடத்தப்படும் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பப்படுதல் வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆதலால் மேற்குறித்த அடிப்படை பயிற்சியினை தொலைபேசி இயக்குபவர்/தொலை அச்சு இயக்குபவர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பணிமாறுதல் மூலமாக நியமனம் பெற்றவர்களுக்கும் நடைமுறைப்படுத்துவது நிர்வாக நலனுக்கும், சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கும் நன்மை அளிப்பதாகும். எனவே, தொலைபேசி இயக்குபவர்/தொலை அச்சு இயக்குபவர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பணி மாறுதல் மூலம் நியமனம் பெற்றவர்களுக்கு, பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படைப் பயிற்சியினை அளிக்க வேண்டும் என்று ஆணையிடப்படுகின்றது.

(ஆ) தற்போது அரசு ஆணை (நிலை) எண்.417, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பி) துறை, நாள் 1.12.1993–ன் படி, தட்டச்சர் நிலையிலிருந்து இளநிலை உதவியாளராகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கும், அரசு ஆணை (நிலை) எண்.43, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பணி–பி) துறை, நாள் 15.2.94–ன் படி கடைநிலை ஊழியர் மற்றும் பதிவறை எழுத்தர் போன்ற இனங்களில்இருந்து உதவியாளராகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கும் பவானி சாகரில் நடைமுறைப்படுத்தப்படும் அடிப்படைப் பயிற்சி பெற வேண்டுமென்று நடைமுறையில் உள்ள விதிகளின்படி உள்ளது. மேற்குறித்த முறையில் சிலர் பதவி உயர்வு/பதவி மாற்றம் பெறும்போது 53 வயதைக் கடந்துவிடுவதால், இவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டிய சாத்தியக்கூறுகள் இல்லாமல் போய்விடுவதால், பயிற்சி முடித்துவிட்டு அரசுப்பணியில் 5 ஆண்டு காலம் பணியாற்ற இயலாமல் போய்விடுகிறது. மேலும், 53 வயதைக் கடந்தவர்களுக்கு இதுவரை பணியாற்றிய அனுபவமே போதுமானது என்று கருதுவதால், இவர்களுக்கு பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி தேவையில்லை. எனவே, கடைநிலைப்பணி/பதிவறைஎழுத்தர் போன்ற இதர வகைகள் மூலம் நியமனம் பெற்ற 53 வயதைக் கடந்துவிட்ட உதவியாளர்களுக்கு பவானிசாகரில் நடைமுறைப்படுத்தப்படும் அடிப்படைப் பயிற்சியிலிருந்து விலக்களித்தும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

3. மேலே பத்தி 2–ல் வெளியிடப்பட்ட ஆணைகளுக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளுக்கு வேண்டிய திருத்தம் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பி) துறையிலிருந்து வெளியிடப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

துரை. சுந்தரேசன்,
அரசு செயலாளர்.